# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1689/12 - 2011 ජනවාරි 18 වැනි අඟහරුවාදා - 2011.01.18

*1689/12 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*சீ. எவ். 1/64.*

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

*(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

கொழும்பு,
*2011, சனவரி 18.*

ஒழுங்குவிதி

*1. இவ்வொழுங்குவிதி 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, அவசரகால (உள்ளூரதிகார சபைகளை நிருவகித்தல்) ஒழுங்குவிதி என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், அத்துடன் இவ்வொழுங்குவிதி வலுவிலிருக்கும் காலத்துக்கும் அக்காலம் வரையும் மட்டுமே, முறையே இவ்வொழுங்குவிதிக்கான அட்டவணை I, அட்டவணை II மற்றும் அட்டவணை III என்பவற்றிற் குறித்துரைக்கப்பட்ட விடயத்துக்கேற்ப, மாநகர சபைகளின், நகர சபைகளின் மற்றும் பிரதேச சபைகளின் சபை உறுப்பினர்களின் அல்லது உறுப்பினர்களின் பதவிக்காலம், 2011, யூன் 30 ஆந் திகதியன்று முடிவுறுதல் வேண்டும்.*

*அட்டவணை I*

*மாநகர சபைகள்*

1. கொழும்பு மாநகர சபை
2. தெஹிவளை - கல்கிசை மாநகர சபை
3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபை
4. மொறட்டுவ மாநகர சபை
5. நீர்கொழும்பு மாநகர சபை
6. கம்பஹா மாநகர சபை
7. காலி மாநகர சபை

அட்டவணை (தொடர்ச்சி)

8. மாத்தறை மாநகர சபை
9. கண்டி மாநகர சபை
10. மாத்தளை மாநகர சபை
11. நுவரெலியா மாநகர சபை
12. குருநாகல் மாநகர சபை
13. பதுளை மாநகர சபை
14. இரத்தினபுரி மாநகர சபை
15. அநுராதபுர மாநகர சபை
16. கல்முனை மாநகர சபை

அட்டவணை II

நகர சபைகள்

1. கொலன்னாவ நகர சபை
2. அம்பாந்தோட்டை நகர சபை

அட்டவணை III

பிரதேச சபைகள்

1. கொட்டிகாவத்த - முல்லேரியாவ பிரதேச சபை
2. சூரியவெவ பிரதேச சபை
3. அம்பாந்தோட்டை பிரதேச சபை
4. குண்டசாலை பிரதேச சபை
5. கண்டி நான்கு எல்லைகள் மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபை

2- 139/1

---

திருத்தம்

**நகர சபைகள் கட்டளைச் சட்டம்**

10 (2) (அ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

2011, சனவரி மாதம் 06 ஆந் திகதிய 1687/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 01- 468/1 ஆம் இலக்க அறிவித்தலில் "உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நகர சபைகளினது" எனும் வாசகம் "உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நகர சபைகளின் உறுப்பினர்களினது" என திருத்தி அமைக்கப்படல் வேண்டும்.

ஏ. எல். எம். அதாஉல்லா,
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு,
கொழும்பு,
2011, சனவரி 17.

2- 139/2

திருத்தம்

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்**

5 (2) (அ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

2011, சனவரி மாதம் 06 ஆந் திகதிய 1687/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 01- 468/2 ஆம் இலக்க அறிவித்தலில் “உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபைகளின்” எனும் வாசகத்திற்கு பதிலாக “உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபைகளின் உறுப்பினர்களினது” என பதிலீடாகத் திருத்தம் செய்யப்படுகிறது.

ஏ. எல். எம். அதாஉல்லா,
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு,
கொழும்பு,
2011, சனவரி 17.

2- 139/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.